Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 344/2022 |
| Police station | : | நெல்லிக்குப்பம் |
| Deposition of witness for Prosecution | : | LW1 / PW1 |
| Name | : | ஜெயக்குமார் |
| Father Name/Husband Name | : | சந்திரசேகரன் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 22.08.2024 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர் ).

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது கொங்கராயனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்துபோன சந்திரசேகரன் எனது தந்தை ஆவார். எனது அப்பாவிற்கு ராஜவேல் என்ற பெயரும் உள்ளது. கடந்த 3.12.2021ம் தேதி எனது தந்தை வீட்டிற்கு மரவேலைக்காக மர ஜாமான் வாங்குதற்கு எங்கள் ஊரைச்சேர்ந்த தட்சிணாமூர்த்தி என்பவரை எனது தந்தை சுசிகி இரு சக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மேல்பட்டாம்பாக்கத்தில் உள்ள பாலாஜி மரவாடிக்கு சென்றுவிட்டு பகல் சுமார் 1.30 மணியளவில் வீட்டிற்கு திரும்ப வரும்போது மரவாடிக்கு எதிரே அந்த வழியாக வந்த அப்பாச்சி இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு என் தந்தைக்கும் மற்றும் தட்சிணாமூர்த்திக்கும் அடிப்பட்டுள்ளதாக சம்பவத்தை பார்த்த அருகில் இருந்தவர்கள் எனக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள். நான் உடனே கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவர்கள் என் தந்தை வரும் வழியிலேயே இறந்துவிட்டாக கூறினார்கள். இது சம்பந்தமாக நெல்லிக்குப்பம் காவல்நிலையத்தில் புகார்

மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். மறு நாள் போலிசார் பிரேத விசாரணை செய்யும்போது நான் உடனிருந்தேன் அப்போதும் என்னை மறு விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

உடற்கூறாய்வு செய்யும்போது மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போது என் அப்பா அடிப்பட்ட விபரத்தை பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள் என்று சொல்லியுள்ளேன். என் அப்பா விபத்தில் இறந்ததற்கு இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். அதிகமாக இழப்பீடு கிடைக்கவில்லை என்பதால் எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 344/2022 |
| Police station | : | நெல்லிக்குப்பம் |
| Deposition of witness for Prosecution | : | LW2 / PW2 |
| Name | : | தட்சிணாமூர்த்தி |
| Father Name/Husband Name | : | பெரியசாமி |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 22.08.2024 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர்).

**<u>முதல் விசாரணை</u>:**

நான் கொங்கராயனூர் கிராமத்தில் வசித்து வருகிறன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன சந்திரகேரன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் சரியாக ஞாபகம் இல்லை. பகல் சுமார் 2 மணியளவில் நானும் சந்திரகேரன் என்பவரும் அவருடைய இரு சக்கர வாகனத்தில் பாலாஜி மரவாடிக்கு மரம் வாங்குவதற்காக சென்றோம். நாங்கள் ரோட்டை கடப்பதற்காக நின்றுகொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த இரு சக்கர வாகனம் எங்கள் வாகனத்தின் மீது மோதி எங்கள் இருவருக்கும் அடிப்பட்டு கீழே விழுந்து விட்டோம். அதன் பிறகு எனக்கு சுயநினைவு இல்லை. மருத்துவமனையில் நான் மறு நாள் கண் விழித்தபோது தான் என்னுடன் வந்த சந்திரசேகரன் இறந்துவிட்டார் என்பது எனக்கு தெரிய வந்தது. எனக்கு தலை, இடது கால், இடது தோள் பட்டை ஆகிய இடங்களில் பலத்த அடிப்பட்டது. இதனால் எனது இடது காது கேட்கும் திறனை இழந்துவிட்டது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் சுயநினைவு இன்றி

இருந்ததால் யார் வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு தேதி ஞாபகம் இல்லை. போலிசார் விசாரித்த போதும் நாங்கள் சாலையை கடக்க நின்றுகொண்டிருந்தபோது வாகனம் மோதியதாக தான் சொன்னேன். பண்ருட்டியில் இருந்து கடலூர் வரும் சாலையில் கொங்கராயனூர் பிரியும் இடத்தில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள். நீங்கள் சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது. சாலையில் நின்று கொண்டிருக்கும்போது விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சாலையில் நின்றுகொண்டிருக்கும்போது தான் விபத்து ஏற்பட்டது. நான் எனக்கு ஏற்பட்ட விபத்திற்கு இழப்பீடு கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. ரோட்டை நீங்கள் பார்த்து கடக்கவில்லை. உங்களுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.